## கண்டி எசல பெரஹரா நம்பிக்கைப் பொறுப்பு – 2017

---

கண்டி எசல பெரஹரா நம்பிக்கைப்பொறுப்பின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1980 இன் 34 ஆம் இலக்க கண்டி எசல பெரஹரா நம்பிக்கைப்பொறுப்பு அதிகாரச்சட்டத்தின் 16(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நம்பிக்கைப் பொறுப்பின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் ஒரு விபரமான அறிக்கை நம்பிக்கைப் பொறுப்பின் தலைவருக்கு 2018 யூலை 11 ஆந் திகதியன்று வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நம்பிக்கைப்பொறுப்பின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நம்பிக்கைப்பொறுப்பின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, கண்டி எசல பெரஹறா நம்பிக்கைப் பொறுப்பின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள்

இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமம் 02 இன் பிரகாரம் ஏற்றுக்கொள்ளப்பட்ட வடிவமைப்பிற்கு அமைய, காசுப் பாய்ச்சல் கூற்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டு குறைபாடுகள்

பொது நம்பிக்கையின் கீழ் பராமரிக்கப்பட்ட ரூபா 20,000,000 வைப்பின் மீதான மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கு பெறவேண்டிய வட்டி வருமானத்தை இனங்கண்டு கணக்கிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பனவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் 138(8) ஆம் நிதிப் பிரமாணங்களின் நிதிப்பிரமாணம். | உறுதிச்சீட்டொன்றை சான்றுறுதிப்படுத்தும் போது, உறுதிச்சீட்டானது ஒவ்வொரு விபரமும் சரியானதாகவும் முழுமைத்தன்மையுடனும் காணப்படுகின்றது என சான்றுறுதிப்படுத்தும் உத்தியோகத்தர் திருப்தியடைதல் வேண்டும். நிதியத்தின் செயற்பாடுகளுக்கு பயன்படுத்தப்பட்டிருந்த ஏனைய திணைக்களங்களுக்கு சொந்தமான 03 வாகனங்களுக்கு ரூபா 15,500 தொகையான எரிபொருள் செலவினங்கள் நிதியத்திற்கு ஏற்பட்டிருந்த போதிலும், குறித்த எரிபொருள் செலவினங்கள், தொடர்புடைய ஓட்ட அட்டவணைகளில் உள்ளடக்கப்பட்டிருந்தமை சான்றுறுதிப்படுத்தப்படவில்லை. |

(ஆ) 1980 இன் 34 ஆம் இலக்க கண்டி எசல பெரஹரா நம்பிக்கைப் பொறுப்பு அதிகாரச்சட்டம்

---

| | |
|---|---|
| 8(1) ஆம் மற்றும் 9 ஆம் பிரிவுகள் | ஸ்ரீ தலதா மாளிகையின் தியவடன நிலமே, கண்டி நான்கு தேவாலயங்களின் நான்கு பஸ்நாயக்க நிலமேக்கள், கண்டி நிர்வாக மாவட்டத்தின் அரசாங்க அதிபர் மற்றும் சனாதிபதியால் பெயரிடப்படுகின்ற மூன்று உறுப்பினர்களினை உள்ளடக்கிய ஆலோசனைக் குழுவொன்றை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. ஆகையினால், நிதியத்தின் நிர்வாகத்திற்கு குழுவின் உதவியினைப் பெற முடியாதிருந்தது. |

(இ) 2006 திசெம்பர் 22 ஆந் திகதிய, பிஎவ்/423, ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கை.

| | |
|---|---|
| (i) 4.1 ஆம் பந்தி | நம்பிக்கைப்பொறுப்பின் நோக்கங்களின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட பாதீடு முன்னைய ஆண்டின் செப்தெம்பர் 30 க்கு முன்னர் தேசிய பாதீட்டு பணிப்பாளர் நாயகம் மற்றும் அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்காமையினால், அங்கீகாரம் பெறுவதற்கு தவரப்பட்டிருந்தது. |
| (ii) 4.2 (ஈ) பந்தி | மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் வங்கிக் கணக்குகள் மீதான காலாண்டு அறிக்கைகள் பொது நிதிப் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) 4.3 ஆம் பந்தி | தொடர்புடைய ஆண்டுக் கணக்குகளின் இறுதித் திகதியில் உள்ளவாறான செயலாற்றல் அறிக்கை மற்றும் நிதியத்தின் கடன் மீதி திறைசேரி புத்தகங்களுடன் இணக்கஞ் செய்யப்பட்ட கூற்றொன்று, நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3 நிதிசார் மீளாய்வு

### நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான கண்டி எசல பெரஹரா நிதியத்தின் நிதிசார் விளைவுகளினை முன்னைய ஆண்டிற்கான ரூபா 1,916,848 மிகைகளுடன் ஒப்பிடுகையில் ரூபா 741,890 மிகையொன்றினை விளைவித்திருந்தமையால், நிதிசார் விளைவுகளில் ரூபா 1,174,958 ஆன பற்றாக்குறையொன்றை கூட்டிக்காட்டுகின்றது. மீளாய்வாண்டில் ரூபா 1,452,500 தொகையொன்றினால் இருக்கை ஒழுங்கமைப்புக்களிலிருந்தான வருமானம் குறைவடைந்தமை குறித்த பற்றாக்குறைக்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 4 செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 திட்டமிடல்

மீளாய்வாண்டிற்கு செயல்நடவடிக்கைத் திட்டமொன்றும் கூட்டிணைந்த திட்டமொன்றும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 4.1.2 செயற்பாடு மற்றும் மீளாய்வு

1980 இன் 34 ஆம் இலக்க கண்டி எசல பெரஹரா நம்பிக்கைப் பொறுப்பு அதிகாரச் சட்டத்தின் உறுப்புரைகளின் பிரகாரம் பின்வரும் நோக்கங்களினை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(அ) வருடாந்த கண்டி எசல பெரஹராவின் கலை மற்றும் கலாச்சார பெறுமதியினை அதிகரிக்க தேசிய கலைகள் மற்றும் நடனங்களினை ஊக்குவித்தல் மற்றும் மேம்படுத்தல்.

(ஆ) வருடாந்த கண்டி எசல பெரஹராவில் பயன்படுத்தக்கூடிய பொருட்களின் உற்பத்தியில் ஈடுபடல்.

### 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பொது நம்பிக்கைப்பொறுப்பின் பாதுகாப்பின் கீழ் வைப்பிலிடப்பட்ட நிதி ரூபா 20,000,000 தொகையொன்று தொடர்பில் சான்றுப்பத்திரமொன்று, 2018 ஏப்ரல் 30 வரையிலும் நிதியத்திற்கு விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், தொடர்புடைய ஆண்டிற்கு தேசிய சேமிப்பு வங்கியின் வட்டி வீதத்தின் அடிப்படையில் குறித்த வைப்புக்கு நிதியத்திற்கு வட்டியொன்று வழங்கப்படும் என கண்டி பிரதேச செயலாளர்க்கு விலாசமிடப்பட்ட 2018 ஆகஸ்ட் 29 ஆந் திகதிய, இலங்கை பொது நிதியத்தின் பிரீ/5/3/ஆர்/30/சீரீ/5(i) ஆம் இலக்க கடிதத்தின் 03 பந்தியில் அறிவிக்கப்பட்டிருந்தது, ஆனால் முன்னைய ஆண்டு மற்றும் மீளாய்வாண்டிற்கான வட்டித் தொகை அறிக்கைத் திகதி வரையிலும் நிதியத்திற்கு வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கண்டியிலுள்ள இலங்கை வங்கியில் பேணப்பட்டிருந்த சேமிப்புக் கணக்கொன்றில் ரூபா 1,349,870 மீதியொன்றையும் நடைமுறைக் கணக்கொன்றில் ரூபா 1,705,446 ஆன மற்றுமொரு மீதியொன்றையும் நிதியம் கொண்டிருந்தது. ஆண்டு பூராகவும் அந்தக் கணக்குகளில் ரூபா 1 மில்லியனுக்கும் மேலதிகமாக மீதியொன்று காணப்பட்ட போதிலும், அத்தகைய பணத்தினை உயர் வட்டி வருமானமொன்றை உறுதிப்படுத்தி நிலையான வைப்பொன்றில் முதலிடுவதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது நிதியத்தின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் | அவதானிப்பு |
| --- | --- |
| (அ) கணக்கீடு | (i) பெறவேண்டிய வட்டி வருமானத்தை இனங்கண்டு கணக்கிடுவதற்கு தவறியமை<br>(ii) மயக்க நோக்கங்களுக்கு கொள்வனவு செய்யப்பட்ட மருந்துகள், மருந்துகள் இருப்பில் உள்ளடக்கப்பட்டிராது செலவினமொன்றாக பதிவழிக்கப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட இருப்பின் கணக்குகளில் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டிருக்காததுடன் அவற்றிற்கான இருப்புப் பதிவேடுகளினை பேணு வதற்கும் தவறியிருந்தது. |
| (ஆ) நிதிசார் கட்டுப்பாடு | வினைத்திறனான வகையொன்றில் நிதிகளின் புலனாய்வினை மேற்கொள்ள தவறியமை. |
| (இ) பதவியணியின் நிர்வாகம் | வரவுப் பதிவேடுகளினை முறையாகப் பராமரிக்க மற்றும் பதவியணியினரின் நாளாந்த வழக்கமான வேலைகளினை தனித்தனியாக குறிப்பிடத் தவறியமை. |